DEPOSITION OF WITNESS

{Chapter XXIII Code of Crl. Procedure}

IN THE COURT OF XXV METROPOLITAN MAGISTRATE COURT,
EGMORE, CHENNAI-08.

| | |
|---|---|
| Case No | : 5083/2023 |
| Deposition of Witness | : PW 23 |
| Name | : திரு. அலோகோபி |
| Husband/ Father Name | : லோகப்பிராம் |
| Age | : 69 |
| முகவரி | : 10/12, ராஜன் பிளாட்ஸ், இளங்கோ தெரு, |

புழுதிவாக்கம், சென்னை 91.

Solemnly affirmed in accordance with the provision of the oaths act 1969 on the day of 24.06.2026. (**Time -01.30 பிற்பகல்**)

இன்றைய தினம் 1, எதிரி ஆஜர். 2, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. 5 வது எதிரிக்கு வழக்கில் ஆஜராக விலக்களிக்கப்பட்டுள்ளது.

சாட்சியின் அடையாளம் அவருடைய ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் உறுதி செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் 2013 ஆம் ஆண்டு மாம்பலம், கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேற்கண்ட முகவரில் வசித்து வருகிறேன். உதவி ஆய்வாளர் மத்திய குற்ற பிரிவு, சென்னை அவர்களிடம் இருந்து 12.12.2013 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் என்னுடைய அலுவலகத்திற்கு வந்தது. மேற்படி கடிதம் வஞ்சுளவள்ளி என்பவருக்கு வழங்கப்பட்ட பட்டா உண்மை தன்மை வாய்ந்தா என கோரி கடிதம் வரப்பட்டது. அந்த கடிதம் நில அளவை பிரிவுக்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு தலைமை அளவையரிடம் கருத்துரை கோரப்பட்டது. அந்த கடிதத்துடன் வந்த பட்டாவின் நகலும் தலைமை அளவையரிடம் அனுப்பிவைக்கப்பட்டது. அப்பிரிவில் வட்டாட்சியர் நில அளவை பிரிவில் உள்ள ஆவணங்கள் அந்த பட்டா சம்பந்தமாக சரிபார்க்கப்பட்டு எனக்கு கருத்துரை வழங்கப்பட்டது. அந்த கோப்பு மிக கவனமாக பரிசீலனை செய்யப்பட்டதில் பட்டா எண் சிஏ எண் 419/2010 என வழங்கப்பட்ட பட்டா உண்மை தன்மை வாய்தது என்று 23.01.2014 அன்று கடிதம் உதவி ஆய்வாளர், சென்னை மத்திய குற்றப்பிரிவு என்பவருக்கு வழங்கப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அந்த

கடிதம் நான் வழங்கிய கடிதம் ஆகும். அந்த கடிதம் அசாஆ 145 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கடிதத்துடன் அனுப்பப்பட்ட Extract the down survey land register என சான்றுநகல் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டது. இந்த ஆவணம் அசாஆ 146 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கடிதத்தில் மேற்படி பட்டா மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை என்பவரால் ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளேன். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். (1.45 பிற்பகல்)

( உணவு இடைவேளிக்கு பிறகு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது) (2.59 பிற்பகல்)

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எத்தனை ஆண்டுகள் மாம்பலம், கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிகிறேன் என்றால் 2013 ஆம் ஆண்டு ஒரு வருடமாக பணிபுரிந்தேன். நான் எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்றால் 30.04.2015 அன்று ஓய்வு பெற்றேன். ஓய்வு பெறும் போது நான் எந்த அலுவலகத்தில் பணிபுரிந்தேன் என்றால் உசூர் தாசில்தார் (கலால்) பிரிவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்தேன். நான் 2010 ஆம் ஆண்டு எங்கு பணியில் இருந்தேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. அசாஆ 145 பதில் கடிதம் 12.12.2013 கொடுத்த கோரிக்கை கடித்தின் பதில் கடிதம் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் வரப்படும் தபால்களை பதிவு செய்வதற்கு பதிவேடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த பதிவேடு DR பதிவேடு என்று சொல்வார்கள். 12.12.2013 தேதியிட்ட கடிதம் எங்கள் அலுவலக கோப்பில் இருக்கும் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கடிதத்தை நான் பரிசீலனை செய்து தான் பதில் கடிதம் அசாஆ 145 கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு 12.12.2013 தேதியிட்ட கடிதத்தை வழங்க கோரி மாம்பலம், கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. அந்த கோரிக்கை கடிதம் மத்திய குற்றப்பிரிவு V வது பிரிவு உதவி ஆய்வாளர் கொடுத்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் விசாரணை சாட்சியம் அளிப்பதற்கு முன்பு 12.12.2013 தேதியிட்ட கோரிக்கை கடிதம் நான் நீதிமன்றத்தில் இருந்து வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. 12.12.2013 தேதியிட்ட கோரிக்கை கடிதம் இந்த வழக்கில்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்ற விவரத்தை போலீஸாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டேன். தாக்கல் செய்திருப்பதாக போலீஸார் தெரிவித்தார்கள். நான் அந்த கடிதத்தின் நகலை கேட்டு பெற்று கொண்டேனா என்றால் இல்லை. என்னை உதவி காவல் ஆணையர் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 23.01.2014 ஆம் ஆண்டு விசாரித்தார்கள். அசாஆ 145 ஆவணம் 23.01.2014 போலீஸார் என்னை விசாரித்த போது கொடுத்தேன் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டு நான் எங்கு பணிபுரிந்து வந்தேன் என்றால் தற்போது எனக்கு நினைவில் இல்லை. பட்டா பாஸ்புக் சட்டம் 1983 என்ற சட்டம் சென்னை மாவட்டத்திற்கு பொருந்தாது என்றால் சரிதான். வருவாய் நிலை ஆணைகள் (RSO) சென்னை மாவட்டத்திற்கு பொருந்தும் என்றால் சரிதான். பதிலுடன் கொடுக்கப்பட்ட இணைப்பு ஆவணத்தில் கண்டுள்ள சர்வே எண்ணில் எத்தனை ஏர்ஸ்க்காக வழங்கப்பட்டது என்றால் 55 ஏர்ஸ்க்காக வழங்கப்பட்டது. ஒரு ெஹக்டருக்கு 100 ஏர்ஸ் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசாஆ 145 ஆவணத்தில் 4 ஏக்கர் 72 சென்ட் என போடப்பட்டுள்ளது. எத்தனை ஏர்ஸ் என்றால் ஏர்ஸ் கணக்கு எனக்கு தெரியாது. நான் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் என்னென்ன பதவியில் வகித்து வந்தேன் என்றால் உதவியாளர், துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகிய பதவிகளில் வகித்து வந்தேன். எனக்கு ெஹக்டர், ஏர்ஸ் மற்றும் ஏக்கர் கணக்கு தெரியாது என்றால் சரிதான். அசாஆ 145 ஆவணத்தில் பட்டா ரத்து செய்யப்பட்டது. 2011 ஆம் ஆண்டு என தெரிவித்துள்ளேன். அதற்கு தேதி, மாதம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சென்னை மாவட்டத்தில் எத்தனை கோட்டாட்சியர் அலுவலகம் உள்ளது என்றால் கோட்டாட்சியர் அலுவலகம்இல்லை, மாவட்ட வருவாய் அலுவலகம் மட்டும் உள்ளது. 2011 ஆம் ஆண்டு மாவட்ட வருவாய் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் நகல் இருக்கும். அசாஆ 9 மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு நகல் என்றால் சரிதான். அசாஆ 9 ஆவணத்தில் உரிமையியல் வழக்கு எண்கள் அசல் வழக்கு எண்கள் 417/2010, 8055/2010 மற்றும் 2094/2013 ஆகிய வழக்குகள் சென்னை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அசாஆ 9 ஆவணத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரிவித்துள்ளது. ஆனால் அதை பற்றி முடிவு விவாதிக்கப்படவில்லை. அந்த வழக்கு கோப்புகளை நான்

வட்டாட்சியர் அலுவலகத்தின் கோப்பில் இருந்து எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் மாம்பலம், கிண்டி வட்டாட்சியர் தரப்பினரா என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். போலீஸார் வேண்டுகோள் கடிதம் கொடுத்த போது இவ்வழக்கில் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை நகல்கள் கொடுத்தார்களா என்றால் கோப்பை பார்த்தால் தான் தெரியும். தற்போது தெரியவில்லை. அசாஆ 146 ல் என்னுடைய கையொப்பமோ, அலுவலகத்தின் முத்திரையோ இல்லை என்றால் சரிதான். அசாஆ 145 ஆவணத்தில் இணைப்பு ஆவணம் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் விவரம் உள்ளதா என்றால் இல்லை. அசாஆ 146 ஆவணம் நகல் என்றால் சரிதான். போலீஸார் வேண்டுகோளுங்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. அசாஆ 146 ஆவணம் போலீஸாருக்கு வழங்க எனக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரிதான்.

2 <u>**வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

அசாஆ 145 ஆவணத்துடன் வழக்கு கோப்பில் உள்ள 05.11.2007 தேதியிட்ட அனுபவ சான்று போலீஸாரிடம் நான் வழங்கினேனா என்றால் நான் வழங்கவில்லை.

(சாட்சியிடம் எதிரி தரப்பில் வழக்கு கோப்பில் இருந்த அரசு தரப்பு ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டுகோள் வைக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்ததனால் இச்சாட்சியின் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Typed to my dictation in Open Court,
read over to the deponent and admitted
to be correct.

M KALIMUTHUVEL Digitally signed by M KALIMUTHUVEL

XXV Metropolitan Magistrate,
Egmore, Chennai 08.